ஸ்ரீ

ஸ்ரீ பரந்தாமன் துணை

பெங்களூர் சேர்ந்த பன்னேரி

கட்டா திருவிழா வழிநடை

சிங்கார

# லாவணி சிந்து.



இவை,

பூ-வே-ஆறுமுக முதலியார் பிரதமசீடராகிய

## A. S. முருகேசனால்

சென்னை: ஸ்ரீ சுப்பிரமணியவிலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1919.

விலை பை 6.

O-1MMN9,S
N19
148866

உ

ஸ்ரீ பரந்தாமன் துணை.

[illegible] தேர்ந்த பன்னேர் கட்டர திருவிழா வழிநடை

# சிங்கார லாவணி சிந்து.

564 ... 600 003.

## விநாயகர் துதி வெண்பா.

பன்னேருகட்டா திருவிழாவைப்பாடலாய்பாடுதற்கு
வெண்ணீறணிந்தோனீன்ற விநாயகனேயிப்புவியில்
பாடினேன்சென்னை பாலன்முருகேசன்
நாடினேன்வுந்த னடிதான்.

காமரசக்குயிலேயென்ற-லாவுணி-வர்ணமெட்டு.

கண்கொண்டஜனங்களும் காணவேபோகுறார்
　கண்மணியே காணலாம் வாடி வாடி
பன்னேருகட்டாவில் நடக்கும்வேடிக்கைப்பார்க்க
　பண்புடன் பூட்டிக்கொண்டு நாடி நாடி
கம்மல்ஜிம்மல் கழுத்தில் சர்டுமிட்டு
　காலுக்கு கொலுசுதண்டை மாட்டு மாட்டு
தும்மல்யாருமிப்போது தும்பாதமுன்னமே
　துரிதமாய்வருகுவாய் கூட்டு கூட்டு
ஒட்டியாணமெடுத்துயிடுப்பில் அணிகுவாய்
　உன்னிதமானயெந்தன் பெண்ணே பெண்ணே
எட்டி என்பின்வாரும் யேருளஜனக்கூட்டம்
　யேறெடுத்துப்பாராய் கண்ணே கண்ணே
கோவர்ஜான்புடவையைக் கொண்டுவந்திருக்குறேன்
　கோதையரே கட்டி கொள்ளும் கொள்ளும்
காவேரிசெட்டிதந்த கஸ்தூரிரவிக்கையை
　கண்மணியே போட்டு கொள்ளு கொள்ளு
நெத்தியில்பொட்டுமிட்டு நேத்தமக்குமையுமிட்டு
　நீரினல் ஸ்தானமது செய்யும் செய்யும்
சித்திரமடமானே சீவிபிச்சடாபோட்டு
　சீக்கிரம் செல்வோம்பாதம் வுய்ய வுய்ய
சம்பங்கிராமசாமி சன்னதிதெரிசிக்க
　சந்தோஷமாய்நாமும் போவோம் போவோம்

இம்சைகள்தீர்த்து இரக்ஷ

இந்தவேளை தெரி சிப

வருஷத்துக்கொருதிரு விழாவும்வான

வைகுண்டநாதனை தெரி சிக்க

பருவமுதுள்ளபெண்ணே பாதையை நீயும்

பலரும்போகும் வழியை தக்க

பெண்ணான அகலிகை பெருஞ்சாபம் தீர்த்திட்ட

பேரான பரந்தாமனை இன்று இன்று

பண்ணினபாவமும் பஞ்சாய்ப்பரந்தோடும்

பாவையே வருகுவாய் நன்று நன்று

எத்தனையோஸ்தளங்கள் யேகியேநாம்கண்டோம்

இதனைப்போலவே எங்கும் காணோம் காணோம்

அத்தியைக்காத்திட்ட ஆதிசேஷன் சன்னதி

ஆரணங்கே பார்க்க போவோம் போவோம்

ஐந்தாவது ஜியார்ஜ் அரசரின் பாதத்தை

அடியேன் முருகேசன் போற்றி போற்றி

சிந்தாக்பாடினேன் சிறுபிழையிருக்கினும்

சீர்திருத்திக்கொள்ள சாற்றி சாற்றி

14806k

## ஆண்பெண் இருவருஞ்சொல் தெம்மாங்கு.

பெண். வெய்யலினாலே மனம் வேகுதே மனஞ்சோருதே
தையல் நடக்கவுமே தானாகாது என்கணவா

ஆண். குளம்கோயில்போனாலே கோதையரே சொல்லுகிறேன்
கால்நடையாய் நடந்தோமானல் கடவுள் கடாக்ஷமடி

பெண். இன்னமெத்தனை தூரம் யிருக்குது பன்னேருகட்டர
மன்னவரேயெந்தனுக்கு மனம்களிப்பாய்சொல்லுமையா

ஆண். அஞ்சாறுமயிலிருக்கும் ஆண்டவன் சன்னதிபெண்ணே
சஞ்சலப்படாதேயடி சுவாமிதுணையென்றுவாடி

பெண். கால்நடையாய் நடந்ததினால் கனத்தபசியாகுதைய்யா
வேளைபசிதீர்ந்தாலே வேகமாய்வருவேன் மெய்யா

ஆண். கொட்டிகிரிகிருமஞ்சென்று கோதையரே பசிதணிவோம்
அட்டியின்றி நீயுமேதான் ஆரணங்கே நடந்துவாராய்

பெண். எல்லாஜனங்களுமே யேனோதான் யிங்குதங்குவது
சல்லாபமாகவேதான் சாற்றுவீரே என்கணவா

...வம் யிதுவடிபெண்ணே
...தகுந்தயிட மிதுமுன்சொன்னேன்
...காலமாச்சு நாதனேநாம் உண்பதற்கு
...க பலகாரமும் புசிக்கவே வாங்கிவாரும்
...தீர்த்துக்கொண்டு ஆரணங்கேவாங்கிவாரேன்
...யாசம் பூண்டவரை கண்டுதெரிசிப்பாயடி

இதுவும் இருவர்சொல் அலங்காரம்.

பெ. என்னஆபீசுயிது நாதா நாதா
யெனக்கரியச்சொல்லவேணும் பாதா பாதா

ஆ. போலீசுடேஷனிது பெண்ணே பெண்ணே
பாராவுமிருக்குதுபார் சொன்னேன் சொன்னேன்

பெ. எல்லவரும் யிருப்பதுபோல் நாதா நாதா
யிருந்துபசியாறிசெல்வோம் பாதா பாதா

ஆ. உந்தனது யிஷ்டம்போல் பெண்ணே பெண்ணே
வுண்டுபசியாரிசெல்வோம் சொன்னேன் சொன்னேன்

பெ. அய்யரின் கடைதனிலே நாதா நாதா
அரும்பசிக்குவாங்கிவாரும் பாதா பாதா

ஆ. சாருயக்கள்ளுகடை பெண்ணே பெண்ணே
பாராய்வுன் னிருகண்ணால் சொன்னேன் சொன்னேன்

பெ. கடைமூஞ்சில் இடிவிழுக நாதா நாதா
காப்பியுடன் வாங்கிவாரும் பாதா பாதா

ஆ. சத்திரம் தன்னிலே பெண்ணே பெண்ணே
பத்திரமா யுட்காரும் சொன்னேன் சொன்னேன்

பெ. இரும்பைச்செல் லெறிக்குமோ நாதா நாதா
இருப்பேன் வாங்கிவாரும் பாதா பாதா

க்ரவடிச்சிந்து மெட்டு.

ஆ. அய்யரே ஒருரூபாய்க்கு ஆனதோர் பலகாரமும்
அன்புடனே எந்தனுக்கு தாருமே யிப்போ
யன்புடனே செல்லுவே னின்னேரமே
நெய்தோசை புளியோரை நேரிசையே யிட்ளியுடன்
ரவையினாலே செய்தவுப்பு மாவுமே உடன்
பாலையே பால்வார்த்த ... காப்பியுமே

பெ. இந்தபண்டம் வாங்கிவர
என்னசெய்தீர் நீருமே
முன்னம்செய்த கர்மவிதிகள்

ஆ. மணிமூன்றும் ஆகவில்லை பாவையே
பார்த்துபோகலாம் நாம் வேடிக்கை
தீர்த்துக்கொள்ள நீட்டுமுந்தன் கையை

பெ. பசியுமடங்கிபோச்சு புசித்ததோர் வுணவிலே
பத்தாவே எழுந்துவாரும் முன்னமே யினை
சித்தினியும் வருகுரேன் வுன் பின்னமே

---

காணவேணும் காணவேனும் என்ற வர்ணமெட்டு.

ஆ. வுச்சிதமயிலே மடமானே நாமும்
வுண்டுபசி தீர்த்துக்கொண்டோம் தேனே இப்போ
வுண்ணவே தாம்பூலம்கொஞ்சம் எண்ணியேநாமுமேவாங்க
வாரும் களி கூறும்

பெ. வாங்கயென்னைக் கேழ்ப்பதென்ன நாதா யிந்த
வஞ்சியும் வேண்டாமென்றேனு பாதா சென்று
வாங்கிவாரும் பொம்பாய்பீடா யேங்கியேபுசித்து செல்வோம்
நாமே யிப்போ தாமே

ஆ. அன்னமேநான் பொம்பாய்பீடாதானே யிப்போ
அருந்தவே வாங்கிவந்தேன் தேனே நீயும்
ஆலசியம் செய்யாமலே அருந்துவாயிப்போதுமே
மானே மட மானே

பெ. கதையுரைத்து கடந்ததினால் நாதா எந்தன்
கால்வலியும் தீர்ந்துபோச்சு பாதா அதோ
காணுதே அதுஎந்தவூர் தோணுதே ஆலயம் எதிர்
சாமி எந்தன் காமி

ஆ. பஞ்சவரைக்காத்த மட மானே மாயன்
பாண்டுரங்கன் சன்னதியிது தானே நாளை
காலையி லெழுந்துஸ்நானம் கன்னியமாய் துயிலுடுத்தி
செல்வோம் யாம் உய்வோம்

---

ஓவ்ம

ப தகுந் ச்சிந்து.

வக... காலமார்ன் செப்பிவாரேன்-... சிங்..க
..க பலகாருமையுள்ள பெங்களூரசேர்ந்த-அடி அ..
..ப தீர்த்..ாம் போகுவோம்வாருய்-சீக்கிரம் புரப்ப
..ஜனமெல்லாம் போகும்முன்னே - ஸ்தானம்செய்..
..ய ..-எந்தனது பின்னேவாயண்டி-பெண்ணே ஏகுவோம் மலை..தினில் இப்பொழுதேபார் - கார்த்திடுவார் பரந்தாமனும்-அடி கண்மணியே கோகிலமே சொல்லிவாறண்டி-இங்குவந்தால் வினைகள் அகலுமாம்-வைகுந்த நாதன் விளங்கும் மலையின்மேல்-யிருக்குங்குளமாம்-இந்தகுளத்தில்பெண்ணே-ஸ்தானம்செய்து யிருக்குறுர் வெகுபேர்கள் பார்த்திடுவாய்-எந்தனது வார்த்தைதள்ளாமல்-நீயும் யிரங்குவாய் நானும்வந்து ஸ்தானம்செய்குரேன்-சீக்கிரம் புரப்படடி - தேவன்தேருபோயி பார்த்திடலாம்-வருகுவாய் கண்ணே-மாலையேழுமணிக்குமேலே பகவான் மங்களாய்-புஷ்ப விமானமதிலே-வந்திருக்கும் புகழ்ச்சியைப்பார் - அவரை வரங்கேட்டால் கொடுப்பாரே-வீடுபோகலாம். (தந்தினம்)

## கும்மி பாடல்.

சுந்திரமான வடிவழகிபெண்ணே-செப்புவேனானென்று கேழ்ப்பாயே, சந்திரனும்வந்து வுதித்துமேலிட்டார் ஸ்நானங்கள் செய்ய வருவாயடி. (1)

மலையின்மீதிலே யேறிடுவோம்பெண்ணே - மண்டபக்குளத்தருகினிலே, சல்குயின்றிநாமும் ஸ்நானமதுசெய்து சீக்கிரம்வருகுவோம் வாரும்பெண்ணே. (2)

யேகஜனக்கூட்டம் பாராயோபெண்ணே-எந்தனதுபின்னே நீயுமேதான், வேகமாய்வாராய் குளித்துமுழுகியே வேண்டிதுதிப்போம் ஸ்ரீராமனடி. (3)

சிலையைப்பெண்ணாக்கிய சீதாராமனடி-சிந்தித்தேதியானித்து குளித்துவிட்டோம், மலையைக்குடையாய் கொண்டமாயனடி மன்ருடுவோம்மாதே வாராயே. (4)

பட்டுப்புடவையைக் கட்டிநீயும்-பழையபுடவையைப் பதனம்பண்ணு, விட்டுவிட்டாயானல் வீம்புக்காரர்கொண்டு வேகமாய் செல்வாரே பெண்ணரசே. (..

தவர்.

பகல்பனிரெண்டு ம
வளையிலே, வெகுஜனம்விரிதன்
ருவாய் தூரம்செல்வோம்.

சந்திரன்தன்னிலே சகலமானவருக்கும்-சா
தத்தைபெண்ணே, இத்தரைமீதினுள் யில்லையென்றுநீயும்யேக்
காள்ளாதடி பெண்ணரசே. (9)

சம்பங்கிராமசாமியினடியை-சகலஜெனங்களும் காண்பதற்கு, தம்பதிகளுடன்வந்து யிருப்பதை தானேகண்டறிவாய்பெண்ணரசே. (10)

முன்னாலே மேளவாத்தியத்துடனும் - பின்னாலேபிருமணர் கோஷ்டத்துடன், அன்னமே அய்யன் ரதத்தினில்யேறியே அருள்தரவருவதை பாரு டி. (11)

வைகுந்தவாசரே எங்களையுங்காரும் - வாமனரூபமெடுத்தவரே, கைகுவித்துநாங்கள் போற்றிசெய்கோமையா கார்க்கக்கடன் அய்யா காரணரே, (12)

பலவிதமான கடைகளைநாமும்-பார்த்துபலகாரம் புசித்திடுவோம், இலவசமாகவே தருவாராமிந்த பிராமணர் கடைதன்னில் பெண்ணரசே. (13)

இரவுபனிரெண்டு மணிக்குமேலவே-மீசரும் புஷ்பவிமானத்திலே, ரதிமன்மதன் போலேலக்ஷுமியுடன் ரமிக்கைசெய்வாராம் பெண்ணரசே. (14)

பகவானைகாண என்றுவருவோர்க்கு-கவர்ண்மெண்டார் உத்திரவும் பெற்றுக்கொண்டு, பாணவேடிக்கைகள் செய்யும் வகையை பாருமடியெந்தன் பெண்ணரசே. (15)

பல்லக்கைஒருகை கண்டுமேயெல்லோரும்-பலரும் கோபாலா வென்றுமேதான், எல்லையில்நின்று கூச்சலிடுவதை யேரெடுத்துபாரும் பெண்ணரசே, (16)

சாய்-எந்தஜனங்களும்
...ருவரும் தையலேசெல்லு
...மல்
(19)

...மசு
...பாகுதாமேயிந்த - பேர்போன
...டார்... ம், திங்கள்வதனிலே டிக்கட்டும் வாங்
...ண்... காகவே யேறுவாயே.
(20)

மைசூரை ஆளும் மகாராஜதீரர் - மாதரசேபேட்டை வந்து விட்டோம், கூசாமல்மோட்டார் வண்டியிரங்கியே கோலாருநானையும் போகலாமே.
(21)

ஆறுமுகமுதலியாரின் சீடனும்-அன்பனும்சென்னை முருகேசனும், ஆறுகாசுவிற்கும் புத்தகத்தை அனைவரும்வாங்கியும் வாசிப்பீரே.
(22)

பாடிபடித்தோர் மிகவாழியிதை-பண்புடன் அச்சிட்டோர் தான்வாழி, தேடியேவாங்கும் புண்யர்வாழி தேவனைப்போலவே வாழ்வாரே.
(23)


## நேர்த்தியான்பட்டு அங்கவஸ்திரங்கள்.



இவைகள் வெகுநேர்த்தியான பளபளப்புள்ள பட்டினால் நெய்தது இவைகளை ஆண்பிள்ளைகள் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், பெண்கள் மேலாக்காகவும் சிறுபிள்ளைகள் தாவணியாகவும் உபயோகிக்கலாம் இதில் ரோஸ், பச்சை, சிகப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை, மேகவர்ணம், வெங்காயப்புரை வர்னம், கத்திரிப்பூவர்னம் முதலிய அநேகவர்னங்கள் உண்டு $5\frac{1}{2}$-முழம் நிகளமும், $2\frac{1}{2}$-முழம் அகலமும் உள்ள பட்டு துப்பட்டா அழகிய கரையுடன் கிடைக்கும்.

பட்டு அங்கவஸ்திரம் 1-க்கு 3—0—0

எமது விலாசம்,

**பி-எம்-அலக்ஜான்ரா அண்டு கம்பெனி,**

நெ, 28. வடமலைமேஸ்திரி தெருவு சௌகார்பேட் மதறாஸ்.